சைவ பரிபாலன சபை வெளியீடு:
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம் உ.

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவுபெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40.

பத் ௯0] [illegible] காலயுத்தி ஞூ மார்கழி மீ உஅ உ வெள்ளிக்கிழமை (2 1-1979) [இல-௩௭

# மாவைப் பதியில் மகர மாத இலட்சார்ச்சனை

## ஆறு பலவாறு என்று ஆய்ந்து கூறுகின்றார் மாவை அந்தணர் ஏறு

— சிவஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் —

நிகழும் காலயுத்தி ஞூ தை மீ 19-ம் நாள் (1-2-79) வியாழக்கிழமை ஷெ கோவிலில் ஷண்முகப்பெருமானுக்கு இலட்சார்ச்சனை ஆரம்பமாகும். தை மீ 28-ம் நாள் (10-2-79) சனிக்கிழமை தைப்பூசத்தன்று பகல் நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் அதனையடுத்து தீர்த்த திருவிழா, விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் ஷண்முகார்ச்சனையோடு இலட்சார்ச்சனை பூர்த்தி அடையும். இலட்சார்ச்சனை நிகழ்ச்சிகள் அனைத்தும் குறிப்பிட்ட நேரத்துக்கு ஆரம்பித்து குறிப்பிட்ட நேரத்துக்குப் பூர்த்தி அடையும் என்பது கவனிக்கத்தக்கது.

ஆதியாய், அநாதியாய், அன்பே வடிவாய் அழகே உருவாய், ஆனந்த அமுதமாய், அவனிவாழ் மக்கட்கெல்லாம் அருள் பாலிக்கும், மாவை வளர் அறுமுகப் பரஞ்சுடரின் கருணை பொழி திருமுகங்களும் அழகிய மணி மகுடமும், அணி பணிகளோடு திய அகண்டமாரபும் ஆயுதம் பல தாங்கிய பன்னிரு கரங்களும், அபயவரத காமரமைடும் அவற்றில் தாங்கிய அழகிய வேலும், குக்குடக் கொடியும், சிறந்து விரிந்த சிகி வாகனமும் மாயக் காட்சிதரும் முழுமுதல் அழகிய மூர்த்தியையும், அணிருக்க மலர்மாலையணிந்த தோள்களும், முழுமதி யன்ன வதனங்களும், தெய்வமொழித் திருவாயில் புன்னகையும் அணிபணி

(வளர்ச்சி ௩-ம் பக்கம்)

## குறிஞ்சிக் குமரன் கோவில்

(பேராதனைப் பல்கலைக் கழகம்)

### அலங்கார விழாக்கள்

ஈழத்துக் குறிஞ்சி நிலத்தில் பேராதனைக் கந்தமலையிலே படைவீடு கொண்டெழுந்தருளியிருக்கும் குமரப் பெருமானுக்கு இவ்வருடம் தைத் திங்கள் 19-ம் நாள் (1-2-1979) வியாழக்கிழமை அலங்கார விழாக்கள் ஆரம்பமாகி தைப்பூசப் பெருநாளுடன் நிறைவு பெறத் திருவருள் பாலித்திருக்கிறது எனப் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினர் அறிவிக்கின்றனர்.

## எங்குள்ளான் ஈசன்?

இறைவன் ஒருவன் உளன் என்ற நம்பிக்கை கொண்டவர்கள் இவன் எங்கே உறைகின்றான் என்று தேடிக்கொண்டிருப்பார்கள்.

சமய குரவர்களும் இந்தத் தேடுதலில் இடையறாது ஈடுபட்டுக்கொண்டே இருந்திருக்கின்றனர். அந்த அநுபவத்தை அவர்கள் ஒவ்வொருவரும் திருமுறைகளிலே கருத்துறப் பாடியிருக்கின்றனர்.

ஞானசிகாமணியாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் தனது காட்சியைப் பலவேறிடங்களில் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

இரண்டாம் திருமுறையிலே அந்தணாளர் தொழும் பதிகத்திலே,

திருச்சிற்றம்பலம்,

கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோ
டுள்ளமொன்றி யுள்குவா ருளத்துளான் உகந்தவூர்
துள்ளிவாளை பாய்வயற் சுரும்புலாவு நெய்தல்வாய்
அள்ளல்நாரை ஆலவாயும் அந்தணூ ரென்பதே.

திருச்சிற்றம்பலம்

என்று (திருவிராகம், பண். நட்டராகம்) இனிதியம்புகின்றனர்.

தேடுதல் செய்வார் நெஞ்சம் கள்ளமின்றி வஞ்சக நோக்கமில்லாது விளங்க வேண்டும். அவ்வாறாயின் உள்ளம் ஒருப்படும். அத்தகைய உள்ளம் படைத்தவர் உன்னின் ஆங்கு வந்து உறைபவன் அந்த ஒருவன். ஈசனைத் தேடுதல் மட்டுமல்ல எதற்கும் வழிகாண முற்படுவோர் முயல்வோர் சித்தசுத்தமாயிருத்தல் வேண்டும். கள்ள எண்ணம் வஞ்சகக் கருத்து என்னும் தீக்குணங்கள் உள்ளவர்களிடத்தில் எக்கருமத்தையும் இயற்றுவதற்கும் இறைவன் மறைந்தே நிற்பன். அன்றோ உள்ளமும் ஒருப்படாது உண்மையும் அவர்களுக்குத் தோன்றாது. இந்த கருத்தை மூதலாங் குரவர் அணனோர்டத்தில அழகாக எடுத்துரைக்கின்றனர்.

திருச்சிற்றம்பலம்

ஒல்லையாறி உள்ளமொன்றிக் கள்ளமொழிந்து வெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனாமம் நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலமே யவனே.

திருச்சிற்றம்பலம்

இது திருவலிவலத் திருப்பதிகம். முதலாந் திருமுறையில் உள்ளது. பண்:- பழந்தக்கராகம்.

கரிக்குருவி ஒன்று (வலியான் என்பது) விரதங் காத்துப் பூசித்துப் புண்ணியப் பேறடைந்த வரலாற்றினை இத்தலம் திருவலிவலம் எனனும் பெயரைக் கொண்டது.

இக்குருவிபோல் கள்ளம் ஒழிந்து உள்ளம் ஒன்றிச் சொல்லைத் தூய்மை செய்து நல்லவாறு நாதன் நாமம் நவின்றேத்துதல் வேண்டும் என்பது நாயனார் கருத்தாகும்.

## சைவப் பெரியார் தரும் சைவசமய சாரம்

ஆன்மாக்களாகிய நம்முடைய பிரதானமான தொழில் ஆணவ மறைப்பை நீக்கிச் சிவஞானத்தைப் பெறுதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தலேயாம். சிவஞானத்துக்குக் கடவுளுடைய திருவடிகள் என்றும் பெயர். இதனாலேதான், கடவுளுடைய திருவடிகளை அடைதலே நாம் பிறவி எடுப்பதன் பயன் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அத் திருவடிகளைத் தருமாறு கடவுளை வேண்டுகிறார்கள்.

"ஒருவனே போற்றி
ஒப்பி லப்பனே போற்றி
வானோர்
குருவனே போற்றி யெங்கள்
கோமளக் கொழுந்து
போற்றி
வருகவென் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும்
போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் றனிமை
தீர்த்தே"

என்று பாடியருளியதும் மாணிக்கவாசக சுவாமிகளேயாம்.

## புத்தளத்தில் ஓர் புத்துணர்ச்சி

## இந்து தமிழ் வித்தியாலயம் இங்கு நிறுவப்படுகின்றது

புத்தளத்தின் வரலாற்றில் என்றும் மறக்க முடியாத வரலாறு. புனிதமுடைய மதங்கள் நான்கும் பின்னிப் பிணைந்து வாழும் இம் மாவட்டத்தில் ஆதி நாள் வரையும் இருந்து வந்த ஓர் குறை நீங்கியதால் எல்லோர் உள்ளமும் பூரிப்படைகின்றது. கடந்த பல ஆண்டுகளாக நாம் எடுத்து வந்த இடையறாத பெருமுயற்சியினால் இன்று எமது மத்தியில் ஓர் இந்து பாடசாலை உதயமாகி விட்டது.

சமய பாடம் கட்டாய பாடமாகப் பிரகடனப் படுத்தப்பட்ட சூழ்நிலையில் வேறு சமயச் சூழ்நிலையில் நம் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும் என்ற எமது நியாயமான கோரிக்கையைச் செவிமடுத்த அரசு இந்துக்களின் நலன் கருதி தனியான பாடசாலையை அமைக்கவும்; அங்கீகாரம் அளித்ததுடன் வேண்டிய கட்டடங்களையும் உபகரணங்களையும் அளித்து எம் பணியை நிறைவேற்றி உள்ளது.

புத்தளம் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் உதவி நிதி திட்டமிடல் அமைச்சருமாகிய கௌரவ அல்ஹாஜ் எம். எச். எம். நைனா மரிக்கார் அவர்கள் எமது அன்பான கோரிக்கையை ஏற்றுக் கொண்டதுடன் நாங்கள் கேட்டுக் கொண்டபடி பல துறைகளிலும் தேவையான ஆசிரியர்களை இப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்து தர ஆவன செய்தனர். அவருக்கும், கல்வி அமைச்சருக்கும் எமது உளம் நிறைந்த நன்றி.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதற்கு [illegible] கில் கொண்டு இங்கு வாழும் அனைவரும் ஒன்றுபட்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்து இக் கல்விக்கூடம் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளரவும், நம் குழந்தைகள் நல்ல சமய சூழலிற் கல்வி கற்கவும் நல்ல பிரஜைகளாக வளரவும் இப் பாடசாலையைப் போற்றி வளர்ப்பது உங்கள் கடமையாகும். 'எம் கடன் பணி செய்து கிடப்பதே'' இவ்வாறு புத்தளம் இந்து மகாசபை பொது மக்களுக்கு அறிவிக்கின்றது.

இவ் வித்தியாலயத் திறப்பு விழா 7-1-1979 ஞாயிறு அன்று அல்ஹாஜ் எம் எச். எம் நைனாமரிக்கார் (உதவி நிதி திட்டமிடல் அமைச்சரும், புத்தளம் தொகுதி (பா. உ.) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது ——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

காலயுத்திஹூ மார்கழி உஅ-வ
(12-1-79) வெள்ளிக்கிழமை


## பொங்கினுற் போதுமா?

சமய நிகழ்ச்சிகளை எப் முன்னேரின் முறைக்கமை யப் பேணி வாழ்க்கை முறையைச் சீர் செய்வதே காலத்துக்குக் காரம் மக்கள் எடுக்கின்ற விழாக்கள் விசேட பூசைகள் மங்கலப் பொங்கலைக் முதலியனவற்றின் கருத்து.

புதுப் பானையிலே புதிர் நெல் உகந்த அரிசியும் உழவர்களின் உழுதுணையாம் ஆவின் பாலும் நெய்யும் வகைகளைகள போக விநாயகருக்கு அர்ச்சனை செய்த தேங்காய்த் துருவலும் சிறு தானியங்களுட் சிறந்த பருப்பும் சேர்த்துப் பொங்கிடினும். பால பொங்கிற்று. ஈசான திசையிலே பொங்கி வழிந்தது என்று உள்ளங் குளிர்ந்து உவகை பூண்டு சிவதொண்டர் உறுர் உறவினர் வறியவர் இவர்களுடனே உண்டு களித்தாம். எல்லாம நல்லதே என அவ வளவில நின்றுவிடுவதா யிருந்தால் இந்த நிகழ்ச்சி என்ன பயனை எமக்களிக்கப் போகின்றது.

இந்த வைபவத்திற்குரிய பொருள்களை ஒவ்வொன்ருக எடுத்துப் பார்க்கும் பொழுதுதான் இல்லறத்துள்ளோர் தங்கள் கடமைகளை உணர்தல் இலகுவாயிருக்கும்.

கரும ஆரம்பத்திலே பிள்ளையார் பிடிக்க வேண்டும அல்லவா? அதற்கு பசுபரிபாலிக்கப்படவேண்டும். இந்தப் பசுவே பாலைச் சுரக்கின்றது, அந்தப் பாலிலே மாமணிச் சோதியான் மறைய நிற்றல்போலக் கலந்திருக்கும் நெய்யும் உண்டு. எனவே ஆவைப் போற்றி ஆன் ணத்தைப் பேணிப் பாதுகாத்து வாழ்வது இல்லறத்தாகுரிய இன்றியமையாத பணியாகும் என்பது புலப்படுகின்றது.

பசும் புற்றரையை மேலும் பண்படுத்துவதற்கும் பசு வளர்த்தல் அத்தியாவசியகம். பதப்படுத்தப்பட்ட வயலிலும் தோட்ட நிலத்திலும் கமக்காரன் அழுதுக்குரிய நெல்லையும் பருப்பையும் அவற்றை இறைவனுக்குப் படைப்பதற்கு வாழை, தென்னை கமுகு வெற்றிலை முதலியனவற்றையும் பயிரிடுப்

# மாவைப் பதியில் . . . . .

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

கள் பூண்ட திருமேனியும், சிவம்பணி திருவடிகளையுமுடைய தேவியர் இருவரையும் பார்க்கும்போது,

"பத்தித் திருமுகமாறுடன் பன்னிரு கைகளுமாய்த்
தித்தித்திருக்கும் திருஅமுது கண்டேன்"

என்ற அருணகிரியார் திருவாக்கு எம் உள்ளத்தில் வளராமல் விடாது.

எங்கும் நிறைந்து, எதிலும் கலந்து, எதையும் கடந்து இப்பாலுக்கிப்பாலாய், அகில உலகமும் அளாவி நிற்கும் அறுமுகப் பரம்பொருளை கச்சியப்ப சுவாமிகள்,

"எங்கணும் திருவதனங்கள், எங்கணும் விழிகள்
எங்கணும் திருக் கேள்விகள் எங்கணும் கரங்கள்
எங்கணும் திருக் கழல்கள் எங்கணும் வடிவம்
எங்கணும் செறிந்து அருள்செயும் அறுமுகத்திறைக்கே"

எனக் கந்தபுராணத்தில் ஓர் விசுவரூப சித்திரமாக மிக நுட்பமாகக் காட்டுகிறார் இப்பரஞ்சுடர்.

"அயனெனவாகி, அரியெனவாகி, அறிவொணுப்
பொருளதுவாகி"

விளங்கித்

"திசையாகி அத்திசைக்கோர் தெய்வமாகி"

நான்கு திசைகளுடன் கீழ் மேல் ஆகிய ஆறு திசைகளிலும் வாழுகின்ற மக்கட்கெல்லாம் அருள் சுரக்கும் ஐயனுக அறுமுகம் தாங்கி நிற்கின்றான். இவ்வழகிய பெருமானைப் பார்த்தாலும், அவன் புகழ் கேட்டாலும், அவன் திருநாமம் ஓதினாலும் உள்ளமெலாம் தித்திக்கும் பேரானந்த அனுபவம் பெறலாம். தேறுதலில்லாத அடியார்க்கு, தன் அருள்பொலி ஆறுமுகங் காட்டி, தன் அழகாலும், அருளாலும், அவர்தம் பாவம் தடிந்து, பிறவித் தாபம் தணிக்கும் பேரருளாளனுக மாவைப் பதியில் திகழ்கின்றான். இவ்வருள் மாட்சியைத்தானே, மாவை முருகன் மேல் ஆராத பக்தி கொண்ட அடியவரொருவர்,

"தெய்வநிறை சந்நித் செந்நின்று கைநீட்டித்
திருவருட் டிறங்க ஞுனித்
தேயுமன மழியுமவா செங்கைக்கு மெட்டுநீ"

என்று பாடுகிறார்.

## ஆறுபடை வீடுகள்

ஆறு என்ற எண்ணிக்கை உயர்ந்தது. ஒரு பெட்டி செய்ய வேண்டுமாயின் ஆறு பலகைகள் வேண்டும். கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, மேல், கீழ் என்று திசைகள் ஆறும். இந்த ஆறு திசைகளிலும் பார்வையுடன் ஆறு அகங்களை உடையவன் முருகன்.

(1) சமயம் ஆறு: சைவம், வைணவம், காணபத்யம், கௌமாரம், சௌரம், சாக்தம் என்பன.

(2) அத்துவாக்கள் ஆறு: மந்திரம், வன்னம் பதம், தத்துவம், புவனம், கலை என்பன.

(3) ஆதாரங்கள் ஆறு: மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன.

பெற்றுக்கொள்வதுவும் இல்லறம காக்கின்றவர்களுக்குரிய தொண்டு என்று எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

பாடுபட்டுழைத்து நல்ல வண்ணம் வாழுவதற்குச் சமய நிகழ்ச்சிகள் பாடங்களைப் போதிக்கின்றன என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். வழமையானது பழமையாகிய பாரம்பரியத்துடன் உள்ளது என்ற அளவில் நின்றுவிடுகின்றோம். முன்னோர்கள் என்ன முறையிலே வாழ்ந்து அந்நாளில் நாட்டை வளர்த்தார்கள் என்பதைச் சற்று உற்று நோக்கின் உண்மையை உணரலாம்.

பொங்கல், மங்கலவைபவமட்டுமல்ல; பொருளாதாரத்துக்குப் பொலிவு கொடுப்பது அது. பொருளின் புண்ணியச் செறிவினால் அருளை அடையச் செய்வது அது.

இதனையே வாழ்வாங்கு வாழுதல், நல்லவண்ணம் வாழுதல் என்று சமயகுரவர்கள் எடுத்துரைத்தனர்.

ஆகவே பொங்கல் பொழுதுபோக்குக்குரியதன்று. புண்ணிய வழியிலே வாழ்க்கையைப் போக்குதற்குரியது என்று நினைந்து உணர்ந்து இவ் வாழுவான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை என்பதைத் தேர்ந்து உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து உமை ஒரு பாகனை உள்ளம் கள்ளமின்றி உள்ள வைக்கும் வகையில் மூதாதையர் வகுத்த முறையாம் இது என்று அவ்வழி நிற்போமாக.

# திருத்தொண்டர் திருநாட் சிந்தனை

சி. சிவகுருநாதன் M. A., Dip-in-Ed.

## கலிக்கம்ப நாயனுர்

(குருபூசை - 4-1-79)

கைதடிந்த வரிசிலையாள் கலிக்கம்பன் ... ... ...
அடியார்க்கும் அடியேன்
தி. தொ. தொகை.

எல்லாப் பெருமைகளும் பெற்று விளங்கிய திருப்பெண்ணாகடம் என்னும் ஊரிலே வணிகர் குலத்திலே கலிக்கம்பர் என்றொருவர் இருந்தார். அவர் சிவபெருமானிடத்திலே கொண்ட அன்பினைப் பேணி வளர்த்தாராதலின் தம்மூரின் கண்ணுள்ள திருத்தூங்கானை மாடத்திலெழுந்தருளியுள்ள எம்பெருமானைத் தினமும் வணங்கி வந்தார்.

சிவலிங்கத்தை வழிபடினும் சிவனடியாரை வழிபடாதார் முயிற் அவ் வழிபாடு பயனற்றது என்பதனை உணர்ந்து அரனுர் அன்பர்க்கு வேண்டும் போனகமும, கறி, நெய், தயிர், பால், தேன் முதலியனவற்றைத் திருவமுது செய்ய அவர்களித்து இன்பமுற்றிருந்தார்.

இங்ஙனம் நிகழுகையில் ஒரு நாள் அவர் இல்லத்துக்குத் திருவமுது செய்ய வந்திருந்த தொண்டரின் திருவடிகளை விளக்க முயன்றார். அத் திருத்தொண்டருள் முன் கலிக்கம்பர் வீட்டிலே பணிவிடை செய்து அப்போ திருவேடந் தாங்கி வந்த ஒருவரைத் திருவடிக்கு நீர் வார்த்த மனைவியார் கண்டு 'இவர் முன் எம் வீட்டில் ஏவல் செய்து நீங்கியவர்' என்று நினைக்க, அதனால் நீர் வார்க்க காலந் தாழ்ந்தது. அது கண்ட கலிக்கம்பர் 'இவள் இவ்வடியார் முன்னிலைமையைச் சிந்தித்து நீர் வாராது ஒழிந்தாள்;' எனக் கருதி அவள் கையினின்றும் கரகத்தைப் பெற்று, உடைவாள் கொண்டு அவள் கையைத் தறித்து, தாமே அவருக்கு நீர் கொண்டு அடியார் தாள் விளக்கினார். அடியவர் அமுதுசெய்த தாமே மேலும் முன்னவ்வவல்லாஞ் செய்து முடித்தார்.

இங்ஙனம் சில காலஞ் சிவ அடியார்க்கு திருவமுதளிக்குந் திருத்தொண்டு செய்து சிவபெருமான திருவடியடைந்தார்!

திருநாள்: தை இரேவதி

(4) அரசாங்கம் ஆறு: படை, குடி, கூழ் அமைச்சு, நட்பு, அரண் என்பன.

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையான் [illegible] ஏறு" — திருக்குறள்

(5) அந்தணர் தொழில் ஆறு: ஓதல, ஓதுவித்தல், வேட்டல, வேட்பித்தல, ஏற்றல, ஈதல என்பன.

(6) அகச் சமயம் ஆறு: சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம, வைரவம என்பன.

(7) அகப்பாட்டுச் சமயம் ஆறு: பாடாணவாத சைவம, பேதவாத சைவம, சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பன.

(8) இன எழுத்துக்கள் ஆறு: வல்லினம் 6, மெல்லினம 6, இடையினம 6.

(9) இறைவனுடைய குணங்கள் ஆறு: சுவதந்திரத்வம, சாவஞுஞதை, திருப்தி, அநாதிபோதம அலுப்தசக்தி, அநந்தசக்தி.

(10) ஐசுவரியம, வீரியம், புகழ், திருஞானம், வைராக்கியம என்பனவுமாம்.

(11) சக்திகள் ஆறு: பராசக்தி, ஆதிசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி, குடிலாசக்தி.

(12) வேத அங்கங்கள் ஆறு: சிட்சை, வியாகரணம, சந்தஸ், நிருத்தம, ஜோதிஷம், கல்பம.

(13) சம்பத்துகள் ஆறு: சமம், தமம, உபாதி, திதிட்சை, சிரத்தை, சமாதானம்.

(14) அறிவுகள் ஆறு: சுவையறிவு, ஊறு அறிவு, ஒளி அறிவு, ஓசை அறிவு, மந்த அறிவு, பகுத்தறிவு.

(15) இரசங்கள் ஆறு: இனிப்பு, கசப்பு, புளிப்பு, உறைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு.

(16) இருதுக்கள் ஆறு: வசந்தருது, கிரீஷ்மருது, வர்ஷருது, ஸரத்ருது, ஹேமந்தருது, சிசிரருது.

(17) பருவங்கள் ஆறு: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்.

(18) சக்கிரவர்த்திகள் ஆறு: அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்தவீரியன்.

(19) சாஸ்திரங்கள் ஆறு: வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சை.

(20) பகை ஆறு: காமம, குரோதம, உலோபம, மோகம், மதம், மாற்சரியம்.

இவ்வாறு ஆறு என்ற எண்ணிக்கையில் சிறப்பாகக் கூறத்தக்கவைகள் பல உள. அத்தனையும் கூறின் விரியும்.

ஆறு தலையுடைய அண்ணல் ஆறுபடை வீடுகளில் அவர்கள் அமர்ந்து ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றான்.

வளர்ச்சி 3-ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவைப் பதியில்......

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

ஆறு ஆதாரங்களே அப்பரமனுடைய ஆறுபடை வீடுகளாம். திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பன.

| | | |
|---|---|---|
| உல்லாசம் | — | திருப்பரங்குன்றம் |
| நிராகுலம் | — | திருச்செந்தூர் |
| யோகம் | — | பழநி |
| இதம் | — | ஸ்வாமிமலை |
| சலாபம் | — | திருத்தணி |
| விநோதம் | — | பழமுதிர்சோலை |

இத்தகு வித்தகத் திறத்தை அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் விளக்குகின்றார்.

"உல்லாச நிராகுல யோகவித சல்லாப விநோதனும் நீயலையோ"

இந்த ஆறுபடை வீடுகளையும் அடியார்கள் அன்புடன் வழிபட்டு ஆறெழுத்தாகிய சடக்கர மந்திரத்தைச் செபித்தால் அவர்கள் இருதயத்தில் வேலவன் முருகன் எழுந்தருளியிருப்பான்.


'ஆறு திருப்பதிகண் டாறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே"

என்று கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபர சுவாமிகள் கூறியருளினர்.

புண்ணியம் எண்ணிலாத வகையில் செய்தவர்க்கே இந்த ஆறுபடை வீட்டுத் தரிசனம் ஒருங்கே கிடைக்கும்.

ஆறு கார்த்திகைப் பெண்கள் மகிழ ஆறு திருமேனி கொண்டு அழுது விளையாடியருளியவரும், பராசர குமாரர்களான தத்தர், அநந்தர், நந்தி சக்கரபாணி, சதுர்முகர், மாலி என்ற ஆறுபேருக்கும் உபதேசித்தவரும், ஆறு காலங்களிலும் வழிபடத் தக்கவரும், ஞானப்பிரகாசம், ஞானானந்தப்பிரகாசம், சர்வஞான வியாபகப் பிரகாசம், சுத்த ஞானசாட்சிப் பிரகாசம், சர்வ பரிசுத்தபிரமஞானானந்த அருட்பிரகாசம், அனாதி நித்தியபிரம ஞானானந்த சிவப்பிரகாசம் என்ற ஆறு பிரகாச ஆறுமுகப் பரம்பொருளுமாகிய முருகப் பெருமானுடைய ஆறுபடை வீடுகளை பக்திப் பரவசத்துடன் தரிசிப்போர் இம்மை, மறுமை, முக்தி என்ற மும்மை நலங்களையும் எளிதிற் பெறுவார்கள்.

## பிள்ளையார் பெருங்கதை விழா நிறைவு



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ சிவலிங்க மகாகணபதி (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்) கோயிலிலே பெருங்கதை விழா வெகு சிறப்பாக நிகழ்ந்தது. இருபத்தொரு நாள்களும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாசார்ய சுவாமிகளின் பிரதம சிஷ்யன் பிரமஸ்ரீ நித்தியானந்த சர்மா அவர்கள் "விநாயக மகத்துவம்", 'கந்தன் கருணை" என்னும் பொருள்கள்பற்றி சங்கீத் கதாப் பிரசங்கம் செய்தனர்

**இந்துசாதனம் — புதிய சந்தா விபரம்**

| உள்ளூர் | | வெளியூர் | | |
|---|---|---|---|---|
| ஆண்டு: | 25/- | ஆண்டு | தரைமார்க்கம்: | 75/- |
| | | | விமானமார்க்கம்: | 100/- |
| ஆயுள்: | 150/- | ஆயுள் | தரைமார்க்கம்: | 450/- |
| | | | விமானமார்க்கம்: | 600/- |
| தனிப்பிரதி: | -/40 சதம் | | | |


அதிபர், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,
450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

**அடுத்து வரும் விரத நாள்கள்**

| | | |
|---|---|---|
| ஷஷ்டி | வெள்ளி | 2-2-79 |
| கார்த்திகை | திங்கள் | 5-2-79 |
| ஏகாதசி | புதன் | 7-2-79 |
| பிரதோசம் | செவ் | 9-2-79 |
| தைப்பூசம் | சனி | 10-2-79 |
| பூரணை | ஞாயிறு | 11-2-79 |
| ஏகாதசி | வெள்ளி | 23-2-79 |
| சனிப்பிரதோசம் | சனி | 24 |
| மகாசிவராத்திரி | ஞாயிறு | 25 |
| அமாவாசை | திங்கள் | 26 |

# பசுக் காத்தல்



பசுக்கள் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என ஐந்து வகைப்படும். அவைகளுள், நந்தை கபில நிறமும், பத்திரை கரு நிறமும், சுரபி வெண்ணிறமும், சுசீலை புகை நிறமும், சுமனை செந்நிறமும் உடையனவாம். பசுக்கள் இம்மை மறுமை இரண்டினும் பயனைத் தரும். பசுக்களுக்குச் சாலையை விதிப்படி செய்வித்து, ஆற்றுமண், ஓடை மண், புற்று மண், வில்வதடி மண், அரசடி மண் என்பவைகளால் நிலம் படுக்கல் வேண்டும். முதிர் கன்று இளங் கன்று நோயுற்ற கன்று என்னும் இவைகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைத்தல் வேண்டும் நாடோறும் கோசல கோமயங்களைப் புறத்தே நீக்கிச் சுத்தி செய்தல் வேண்டும். கொசுகு வராமல் தூமம் இடல் வேண்டும். தீபங்கள் ஏற்றல் வேண்டும்.

பசுக்களை இயக்குமிடத்து சிறிதும் வருத்தஞ் செய்யாமல், இரக்கத்தோடும் பலாசங் கோலினாலே மெல்ல ஓங்கி, "போ" 'போ" என்று இயக்கல் வேண்டும். இரக்கமின்றிக் கோபித்து அதட்டி அடிப்பவர் நரகத்தில் விழுவர்; பசுக்களைச் சாலையினுள்ளே சுவஸ்தி என்னுஞ் சொல்லைச் சொல்லி, மெல்ல மெல்லப் புகுவித்து, சிரத்தையோடும், புல்லைக் கொடுத்தல் வேண்டும், நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் அமைத்து, மருந்து கொடுத்துப் பேணல் வேண்டும். அட்டமிதோறும் பசுக்களை நீராட்டி, பூச்சூட்டி, அன்னமும் சலமும் ஊட்டி, தூப தீபங் காட்டி வணங்கல் வேண்டும். பசுக்களை வேனிற் காலத்திலே சோலைகளிலும், மழைக் காலத்திலே மலைச் சாரல் வனங்களிலும், பனிக்காலத்திலே வெய்யில் மிகுந்த வெளிகளிலும் இடர் உறா வண்ணம் மேய்த்தல் வேண்டும்

பசுக்களை வலஞ்செய்து வணங்கித் தினந்தோறும் புல்லுக் கொடுத்தலும், ஆவுரிஞ்சுகல் நாட்டுதலும், கடவுளுக்கும் ஆசாரியருக்கும் பசுவைத் தானஞ் செய்தலும், குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைக் கடவுள் சந்நிதிக்குத் தானஞ்செய்தலும், தேவாலயத் திருப்பணியின் பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவைக் கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தலும் பெரும் புண்ணியங்களாம்.

பசுக்கள் தரும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்களையும் கடவுளுக்கு அபிஷேகம்பண்ணுவித்தல் வேண்டும், பாலை இரண்டு மாசம் செல்லும்வரையும் கன்று பருகும்படிவிட்டு, பின் கறந்து கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும், கன்று பாலுண்டு முலையை விடுத்தபோது, சலத்தினாலே முலையைக் கழுவிக் கறத்தல் வேண்டும், ஆசை மிகுதியினாலே கன்றுக்குப் பால் விடாது கறந்தவன் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்தி பின்பு பூமியிலே பிறந்து கடும் பசியினாலே வீடுகடோறும் இரப்பன். கபிலையின் பாலைக் கடவுளுக்கே கொடுக்க அதனைத் தாம் பருகில் நரகத்து வீழ்வர். புலையர்கள் பசுக்களின் சாலையிலே புகுந்தாராயின், எண்ணில்லாதகாலம் எரிவாய் நரகத்து வீழ்ந்து வருந்துவார்கள்; அவர்களுக்குப் பரிகாரமில்லை. பசுக்களை இடாநீக்கக் காக்காதவர்களும், மலட்டுப் பசுவின் மேலேனும் இடபத்தின் மேலேனும் பாரம் ஏற்றினவர்களும் இடபத்தில் ஏறினவர்களும் நரகத்தில் வீழ்வார்கள்.

— நான்காம் பாலபாடம்.

### நாவலர் இன்று இந் நானிலத்தில் வாழ்வரேல்....?

"இறை — ஒலி"

பாலனஞ் செய்க பசுவையெனப் பாடமொன்று
பாலருக் கன்று பகர்ந்துநால் — சாலமைத்த
நாவலர் இன்றிந் நானிலத்தில் வாழ்வரேல்
ஆவருத்தும் பாவிகளி ரார்,

## மகர மாச பூசை மகிமை

மகரவிராசியுற சூரியன் வரும் தை மாசத்தில் பூசநக்ஷத்திரம் பூரணையுடன் கூடிவரின் உத்தமம். கூடாது வந்தாலும் நக்ஷத்திரம் பிரதானம். அத்தினம் யாகசாலையின் மத்தியிலுள்ள வேதிகையில், உமாகாந்த மண்டலத்தில் மகேசுவரனைப் பூசித்து அதிசயத்துடன் அக்கினியில் விசேடமான ஓமஞ் செய்து, விசேஷமாகத் தேனாலும் ஸ்நபன கும்பத்தாலும் அபிஷேகஞ் செய்து, கிருஷ்ண கந்தஞ் சாத்தி, உற்சவத்தினைச் செய்க. மகரமாத பூசையை விதிப்படி செய்தவர்கள் ஆயுள், செல்வம் ஆதியவற்றை அடைவார்கள்.

கிருஷ்ண கந்தமாவது குங்குமப்பூ, புனுகு, பச்சைக் கர்ப்பூரம் என்னும் பரிமளத் திரவியங்களைப் பனிநீர் கலந்து கரைத்துக் கட்டையாற் சேர்க்கப்பட்ட சந்தனம்.

X X X

### ஐந்துவித உபசாரங்கள்

சிவபெருமானுக்குச் செய்யும் உபசாரங்கள் எல்லாம் ஐம்பெரும் பூதங்களின் சம்பந்தமுள்ளவைகளாய் ஐந்து விதமாயிருக்கும். அவை வருமாறு:—

பிருதுவி சம்பந்தமான உபசாரங்கள்; சந்தனம், புஷ்பம், கிழங்கு, வேர், பழம், அன்னம் முதலானவைகளாம்.

அப்பு சம்பந்தமான உபசாரங்கள்; சலம், பால், தயிர், வஸ்திரம் முதலியவைகளாம்.

அக்கினி சம்பந்தமான உபசாரங்கள்; பொன், இரத்தினம், தீபம், கர்ப்பூரதீபம், ஆபரணம் முதலியவைகளாம்,

வாயுசம்பந்தமான உபசாரங்கள்; தூபம், சாமரை, விசிறி முதலானவைகளாம்.

ஆகாசசம்பந்தமான உபசாரங்கள்; மணி, வாத்தியம், தோத்திரம் முதலானவைகளாம்.

— சிவஸ்ரீ சு. குமாரசுவாமிக் குருக்கள்
(மகோற்சவ விளக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hindu Organ

Friday, January, 12, 1979

## PALMYRAH IN ITS PROPER PERSPECTIVE

The land of the luxuriant palm, which is a special gift of nature to Lanka, does not seem to have been benefitted by this natural endowment as much as it could have. In other words there has been no persistent endeavour to tap the resources of the palmyrah to the utmost, though it cannot be denied that during the forgotten past the people depended on the products of this *Katpakatharu* making every use of it in manifold ways. The learning of the alphabet of the mother-tongue in the case of the children of the kindergarten grade commenced with the letters designed on the palmyrah ola. Before the advent of the printing press, ola manuscripts served not only the needs of the school-going children but also of all others interested in studies.

However, much water has flowed beneath the Elephant Pass Bridge since those good old days. Today the pattern of life in this Eastern land of spiritual greatness has undergone such a complete change that the modern man finds it impossible to believe that there had been a past when life was in blissful bloom. A few may be still paying homage to the ancient ways of living; but they cannot influence the trend of the future.

Now that there is a slight awakening in the country to do researches of forgotten habits and destroyed landmarks, let us take advantage of this enthusiasm and endeavour to hasten back to the old pattern of life and utilize the gifts of nature to the utmost.

The palmyrah is a fully productive palm. Nothing that is yielded by it can be considered as useless. This tree is a money-yielding source living or dead.

At this point of description of the multi purposes of this heavenly palm, it would be particularly appropriate to comment on one type of produce that has survived all changes of times — we means the beverage called toddy. It is a sap which readily ferments and becomes an alcoholic ale. That vital juice when treated with a measured quantity of lime not only gives flavour but also serves as a cooling drink. The popularity the palmyrah has earned is purely because of the yield of toddy. But the people have little realised that this beverage in this form is injurious to human health and detrimental to the moral progress of man.

What then is the proper perspective that should be to explore in full the real benefits of this precious palm.

To begin with we make bold to say that the tapping of palmyrah palm for toddy should be prohibited by legislation as a measure of remedial steps to save the people from the grip of alcohol. We do know that there will be a hue and cry from quarters that have vested interests in the production of toddy. The red herring of economy will be drawn across the track. Substitute the manufacture of sweet toddy and the answer to the problem is at once seen. Purely on the point of view of a favourable economy, the juice of the palmyrah will help the nation manufacture a substantial portion of the sugar that is needed for the country. There will be more prospects of extensive employment. The myth that this proposal will result in creating unemployment will be exploded effectively.

That is the proper perspective because it has a religious outlook. And we are all concerned about the religious point of view.

## A VISITOR WITH A VERITABLE MESSAGE

As if to remind the significance of the celebration of Rajaji Centenary in Sri Lanka, Shri Raj Mohan Gandhi is here giving very useful talks to us.

It is but natural that a grandson of both Mahatma Gandhi and Shri Rajagopalachari should talk about ahimsa and satyagraha alone.

A journalist by profession, Shri Raj Mohan Gandhi is committed to the laudable duty of using his pen for the benefit of mankind. In this noble work he is only following in the footsteps of his illustrious grand-fathers.

Mahatma Gandhi devoted most of his time to journalism, and that was ideal journalism. The Young India, The Harijan and other periodicals edited by Gandhiji are of permanent value containing highly instructive messages to mankind. In the same strain Shri Rajagopalachari edited the Swarajya and contributed soul-stirring articles to 'Kalki'.

Journals in their basic nature must be based on religious scriptures interpreting the messages of saints and patriots for the benefit of the people. Such publications will consequentially help the world pin their hopes on moral re-armament and enable contending nations and leaders eschew violence.

Shri Raj Mohan Gandhi's message is in effect that of his grand-father, the revered Mahatmaji, leavened with the spiritual thoughts of Rajaji. The visit must certainly produce some beneficial change in our way of thinking.

## THE SCIENCE GRADUATE WHO STUDIED RELIGION

The attention of our readers has been appropriately invited by our enthusiastic well-wisher, Shri S. Sivasubramaniam, Life-Member of the Jaffna Saiva Paripalana Sabhai to the need for commemorating the sincere services of an erudite student of Saiva Literature — Shri A. Visvanathan, author of Vedanta Moola Sharam, Commentary on Thirumanthiram and a number of other valuable and essential books on Saivaism, on the occasion of the centenary of the birth of this great literator.

We fully endorse the sentiments expressed by Shri Sivasubramaniam and suggest to our readers that one fruitful way of the commemoration would be for them to possess the books written by Shri Visvanathan and study them as seriously as the author of those books had studied the various books on Saivaism that formed the basis of his efficient research.

Here we quote in full the foreword by the reputed Saiva Siddhantha Scholar Shri K. Vajiravelu Mudaliar to the Science Graduate's 'Analysis of the Thirumantiram':-

"I considered it a privilege and honour to write a few sentences on the merits of the most useful work "An Analysis of the Thirumantiram" brought out by 'A Science Graduate'. Tirumantiram forms the tenth book of the twelve sacred books of the Saiva scriptural lore. The author of Tirumantiram was a Maha Yogin, Thirumoolar by name and the work itself is a comprehensive, philosophic, religious and mystic writing. It is really difficult to understand the meaning and the spirit of a greater part of the work. But the writer has brought to bear all his scriptural learning and spiritual experience in making the work intelligible to those who are interested in understanding the general content of the work and its true spirit. He is fully qualified to interpret the utterings of the mystic of the mystics. The work is a valuable contribution towards the study of the oriental religion and philosophy. His knowledge of the Saiva Sidhantha literature in Tamil and of the Upanishads in Sanskrit is unparallelled. He has already made rich and rare contributions to the enlightening of the Saiva Sidhantha. The Elements of Saiva Siddantha and the Vedanta Moola Saram of the writer are too well known.

I have great pleasure in commending this work as well as the other two works mentioned for the study by students and scholars who wish to have a comprehensive, clear and correct understanding of the highest water mark of the Indian philosophic thought.

I wish to record here that Jaffna is greatly indebted to two great souls after the veteran scholar and faithful aspirant Sri la Sri Arumuga Navalar in the field of Saiva Siddhanta Religion and philosophy; one has been Sri Sivapadasundarampillai and the other our writer, the Science Graduate, Sri Visuvanathapillai, who never wished to appear in the light of history by his name. These two great men have been the two spiritual eyes of [illegible] and its surroundings."

*Letter to the Editor*

### *Forthcoming Centenary of a Saiva Savant*

The centenary of the birth of the late A. Visuvanathan, B. A. of reverred memory, a Saivite savant, author and devotee of very high calibre and member of the Ceylon Civil Service is, I believe, approching. The departed personality had rendered invaluable services by his precious writings and impeccable and exemplary conduct to the cause of Saiva Religion and culture and way of living. He had in his own life in the words of another great Saiva savant Mr. S. Sivapathasundaram pillai whose centenary was recently well celebrated practised what he preached. It is earnestly trusted that the Saiva public would take adequate steps to do the needful in this connection and that the Jaffna Saiva Paripalana Sabhai would also initiate proceedings for this purpose, whereby our religious consciousness would be further promoted, purified, strengthened and inspired.

S. SIVASUBRAMANIAM
Life Member, Jaffna Saiva Paripalana Sabhai

வானமுகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone. 356 ) on Friday, January 12, 1979.*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org